செ.வெ.எண்.9242017 நாள் 06.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**
**மலைக்கிராமம் பகுதியில் இருசக்கர வாகனம் மூலம் வனத்துறையின் சீரமைப்பு பணிகளை சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு.முகம்மது நஜீம்முதீன்,இ.ஆ.ப, அவர்கள் நேரில் ஆய்வு.**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, போர்க்கால அடிப்படையில் சீரமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்துத்துறை உயர் அலுவலர்களையும் உடனடியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அனுப்பி, நிவாரண பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

முதல்வரின் உத்தரவின்பேரில், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு.முகம்மது நஜீம்முதீன்,இ.ஆ.ப, அவர்கள் இன்று (06.12.2017) தடிக்காரன்கோனம், பள்ளக்குளம் அரசு ரப்பர் கழக ஆராய்ச்சி தோட்டம், கீரிப்பாறை, மாராமலை வனப்பகுதி, காளிகேசம் மற்றும் சுருளக்கோடு ஊராட்சியில் உள்ள கூவைக்காடு கானிகிராமம் ஆகிய பகுதிகளில் வனத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சீரமைக்கும் பணிகளை நேரில் ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச்செயலர் அவர்கள் தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, போர்க்கால அடிப்படையில் சீர் செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை வனத்துறை எடுத்து வருகிறது. தொடர்ந்து, பல்வேறு மாவட்டங்களிலிருந்து வனத்துறை பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு, மலை கிராமங்கள் மற்றும் ஊராட்சிகளில் விரைவில் மரங்களை துரிதமாக அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சில பகுதிகளில் மரங்களினால் மின்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மரம் வெட்டும் தொழிலாளர்களை கொண்டு உடனடியாக மரங்கள் அகற்றப்பட்டு, மின்வாரிய ஊழியர்கள் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள உறுதுணையாக இருக்குமாறு வனத்துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

பள்ளக்குளம் அரசு ரப்பர் கழக ஆராயச்சி தோட்டம் மற்றும் கீரப்பாறை அரசு ரப்பர் கழகத் தோட்டத்திற்கு சொந்தமான ரப்பர் மரங்கள் பெறும் அளவில் சேதம் அடைந்துள்ளது. சேதம் அடைந்த ரப்பர் மரங்களை மரங்களின் அருகில் புதிய குழிகள் தோன்றி அவற்றினை மறுபடியும் நடுவதற்கு முயற்சியினை மேற்கொள்ளுமாறு கூறினார். முழுவதுமாக சேதம் அடைந்த மரங்களை அகற்றும் பணிகளை விரைந்து முடிக்கும்மாறும், அரசிடம் சிறப்பு அனுமதி பெற்று பிற பயன்பாட்டிற்கு உகந்த முழுவதுமாக சாய்ந்த மரங்களை அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையில் செயல்படுத்திட வேண்டுமென கூறினார். தடிக்காரன்கோனம் முதல்

மாராமலை வனப்பகுதி வரை செல்லும் 20 கீ.மீ. அளவிலான வழித்தடத்தில் தற்போது 80 சதவீதம் சீரமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. மேலும் மீதமுள்ள பணிகள் நாளை முடிவுடைந்து வாகனங்கள் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நான்கு சக்கர வாகனங்கள் செல்ல முடியாத சுருளக்காடு ஊராட்சியில் உள்ள கூவைக்காடு காணிக்கிராமம் மற்றும் மாராமலை பகுதியில் உள்ள மலைவாழ் மக்களை இரு சக்கர வாகனத்தில் சென்று பார்வையிட்டு வனத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிவாரணபணிகளை கேட்டறிந்தார். மலைவாழ் மக்களின் குறைகள் அனைத்தையும் விரைந்து முடித்திட வன அலுவலர்களை அறிவுறுத்தினர்.

இந்த ஆய்வின் போது முதன்மை வனத்துறை தலைவர் திரு.பசவராஜ் இ.வ.ப., அரசு ரப்பர் கழகம் தலைவர் திரு.அமீத் அஸ்தானா இ.வ.ப., நிர்வாக இயக்குநர் திரு.ராஜேஷ் குமார் மோக்ரா இ.வ.ப., மாவட்ட வனத்துறை அலுவலர் திரு.லிஸ்மிஜி விஸ்வநாதன் இ.வ.ப., கீரிப்பாறை கோட்ட மேலாளர் திரு.முத்து ஐயப்பன் ஆகியோர் உள்ளனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**